# உதயன்

விலை ரூபா 6-00

சுடர் 10 வள்ளுவர் ஆண்டு 2026 கார்த்திகை 01 வெள்ளிக்கிழமை (17-11-1995) UTHAYAN A Lively National Tamil Daily கதிர் 346


## ராணுவத் தாக்குதல்களால் அரசின் நிபந்தனைகளை ஏற்கசெய்ய முடியாது

### பி. பி. ஸிக்கு கரிகாலன் பேட்டி

லண்டன், நவ. 17

படையினர் தற்போது நடத்தி வரும் சூரியப்பிரகாசம் இராணுவ நடவடிக்கையால் விடுதலைப் புலிகளை அரசின் நிபந்தனைக்கு ஒப்ப பேச்சுவார்த்தைக்கு கொண்டு வரமுடியாது. தனித் தமிழ் ஈழத்துக்கான போராட்டம் தொடரும்.

விடுதலைப் புலிகளின் அரசியல்துறை துணைப் பொறுப்பாளர் கரிகாலன் மேற்கண்டவாறு தெரிவித்தார் என்று பி. பி. ஸி. தெரிவித்தது. பி. பி. ஸி. ஆசிய சேவை செய்தியாளருக்கு கரிகாலன் பேட்டி அளித்தார்.

யாழ். நகர் படையினரிடம் வீழ்ச்சி அடையுமானால் விடுதலைப் புலிகள் மீண்டும் கெரில்லா யுத்தத்தை ஆரம்பித்து அதனை மீட்டெடுப்பார்கள்.

யாழ். நகரைக் கைப்பற்றுவதானால் படையினர் பெரும் அழிவைச் சந்திக்க நேரிடும். கைப்பற்றினாலும் அதனைத் தக்க வைக்க பெரும் எண்ணிக்கையான படைகள் தேவைப்படும் என்றும் கரிகாலன் தெரிவித்தார்.

படையினர் தற்போது ஆரம்பித்துள்ள இராணுவ நடவடிக்கை மூலம் புலிகள் இயக்கத்தை அழித்துவிட

(4 ஆம் பக்கம் பார்க்க)

## 1 லட்சத்து 30 ஆயிரம் பேர் வன்னிக்கு இடம்பெயர்வு

யாழ்ப்பாணம், நவ. 17

தற்போதைய இராணுவ நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்ட பின்னர் யாழ். மாவட்டத்தில் இருந்து வன்னி மாவட்டத்துக்கு இதுவரை ஒரு லட்சத்து 30 ஆயிரம் மக்கள் இடம் பெயர்ந்துள்ளனர்.

கிளிநொச்சி அரச அதிபர் திரு. எஸ். தில்லை நடராசா இந்த புள்ளி விவரங்களை அரசுக்கு நேற்று அனுப்பி வைத்தார்.

வன்னிக்குச் சென்றவர்களில் 25 ஆயிரம் பேர் முல்லைத்தீவுக்கும்—

5 ஆயிரம் பேர் மடுவுக்கும்— சென்றுள்ளனர். ஏனையோர் கிளிநொச்சியில் தங்கியுள்ளனர்.

வன்னிக்கு இடம் பெயர்ந்து வந்துள்ள மக்களுக்குத் தேவையான உணவுப் பொருள்களை அனுப்புமாறு கிளிநொச்சி அரசாங்க அதிபர் அரசைக் கோரி உள்ளார்.

(இ-3)

# நேர் எதிராக வியூகம் அமைத்து படையினருடன் புலிகள் கடும் சமர்!

## முன்னேறும் முயற்சியில் மந்த நிலை

யாழ்ப்பாணம், நவம்பர் 17

பல ஆயிரக்கணக்கான துருப்புக்களுடன் இருமுனைகளில் முன்னேற்ற நடவடிக்கையில் ஈடுபட்டுவரும் படையினரை நேர் எதிராக வியூகம் அமைத்து விடுதலைப் புலிகள் தொடர்ந்து கடும் சமர் புரிந்து வருகின்றனர்.

விடுதலைப் புலிகளுக்கும், படையினருக்கும் இடையில் தொடர்ந்து கடும் சண்டை நடைபெறுகிறது.

முன்னேற்ற நடவடிக்கையில் ஈடுபட்டுள்ள படையினர் விடுதலைப் புலிகளின் கடும் எதிர்ப்பைச் சந்தித்துள்ளனர்

இருபாலை, கோண்டாவில் ஊடாக நடவடிக்கையில் ஈடுபட்டுள்ள படையினர் நேற்றும் கணிசமான இழப்புக்களை சந்தித்துள்ளனர்.

மக்களின் வீடுகளையும், கட்டடங்களையும் இடித்து தகர்த்தவாறு படையினர் முன்னேற முயல்வதாக யுத்தகளச் செய்திகள் தெரிவிக்கின்றன.

பெரும் தொகையான பணத்தை செலவழித்து பெரும் எடுப்பிலான இராணுவ நடவடிக்கையை மேற்கொண்டபோதும், விடுதலைப் புலிகளை பலவீனப்படுத்த முடியாத நிலையில்

(4 ஆம் பக்கம் பார்க்க)

### வலிகாமம் பகுதி வாணிபருக்கு

யாழ்ப்பாணம், நவ. 17

வலிகாமம் — வருவாய்ப் பகுதிச் செயலகத்தில் வரி செலுத்தியோர் அனைவரையும் 1995 ஒக்டோபர் மாத

(4 ஆம் பக்கம் பார்க்க)

## யாழ். நகரைப் பிடிக்க 10 நாட்கள் செல்லுமாம்

### ராணுவத் தரப்பில் பின்னடிப்பு

கொழும்பு, நவ. 17

யாழ். நகரில் இருந்து ஒரு கிலோ மீற்றர் தொலைவில் தற்போது நிலைகொண்டுள்ள படையினர் இன்னும் 10 நாட்களில் அந்த நகரை தம்து கட்டுப்பாட்டின்கீழ் கொண்டு வந்து விடுவர் எனத் தான் நம்புவதாக இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் சரத் முனசிங்க தெரிவித்திருக்கிறார்.

இராணுவம் யாழ். நகரை நெருங்கி விட்டதாக பெரிய அளவில் அரச தொடர்பு சாதனங்கள் பிரசாரம் செய்து வருகின்ற வேளையில் இராணுவப் பேச்சாளர் இவ்வாறு கூறியிருப்பது படை நகர்வில் பின்னடைவு ஏற்பட்டிருப்பதையே காட்டுவதாக அவதானிகள் தெரிவித்தனர்.

இராணுவ நடவடிக்கையின் அடுத்த கட்டம் படையினர் யாழ் நகருக்குள் நுழைவதே ஆகும். அது எப்போது நடக்கும் என்பதை திடமாகக் கூறமுடியாது என்று தெரிவித்த பிரிகேடியர் சரத் முனசிங்கா—

இந்த இராணுவ நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டது முதல் கைப்பற்றிய இடங்களைப் பலப்படுத்தி விட்டே அடுத்த நடவடிக்கையைப் படையினர் மேற்கொண்டு வருகின்றனர் என்றும்—

ஓரிரு நாட்கள் அல்லது ஒரு வாரம் கூட கைப்பற்றிய பகு

(4 ஆம் பக்கம் பார்க்க)

## யாழ். நகரினுள் நுழையும் படைகள் நெருக்கடி நிலையைச் சந்திக்கும்

### ராணுவப்பேச்சாளர் தகவல்

கொழும்பு. நவ, 17

யாழ். நகருக்குள் நுழையும்போது கண்ணி வெடிகளும், பொறி வெடிகளும், பதுங்கு குழிகளும் நில அறைகளும் தமக்கு மிகவும் மோசமான ஒரு நிலைமையை உண்டாக்கும் என்று பாதுகாப்பு படையினர் எதிர்பார்ப்பதாக இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் சரத்முனசிங்க தெரிவித்துள்ளார்.

யாழ். நகரைக் கைப்பற்றிய பின்னர் படையினரை இக்கட்டான நிலைமைக்கு உட்படுத்த விடுதலைப் புலிகள் பல தந்திரோபாயங்களைக் கடைப்பிடித்து வருவதாகவும் அவர் தெரிவித்தார்.

பதுங்கு குழிகளுக்குள் இருந்தவாறு படையினர் மீது புலிகள் பெரும் தாக்குதல் தொடுப்பர் என்று எதிர்பார்ப்பதாகவும் அவர் கூறினார்.

யாழ். நகரைப் பாதுகாக்க கடைசி போராளி உள்ளவரை போராடுவது என்று விடுதலைப் புலிகள் உறுதி பூண்டிருப்பதாகவும்—

அதனால் படையினரின் முன்னேற்ற முயற்சி பெருமளவு தாமதமடையும் என்பதை பாதுகாப்பு வட்டாரங்கள் ஏற்றுக் கொண்டிருப்பதாகவும் 'வெரித்தாஸ்' வானொலி தெரிவித்தது.

(ஐ)

## வல்வை நெடியகாட்டில் ஷெல்லுக்கு இருவர் பலி!

### மூவருக்குப் படுகாயம்

வடமராட்சி, நவ. 17

பலாலி முகாமில் இருந்து நேற்றுக் காலை 8 மணி முதல் சுமார் அரைமணி நேரமாக வல்வெட்டித்துறைப் பகுதி மீது படையினர் நடத்திய ஆட்லறி ஷெல் தாக்குதலினால் நெடியகாடுப் பகுதியில் வயோதிபப் பெண்கள் இருவர் பலியாகினர்; வேறு மூவர் காயமடைந்தனர்.

படையினர் விட்டுவிட்டு ஏவிய ஷெல்கள் நெடியகாடு பகுதியிலும் அதனை அண்டிய இடங்களிலும் விழுந்து வெடித்தன.

நெடியகாட்டில் வீடு ஒன்றில் விழுந்த ஷெல்லினால் அங்கிருந்த கிருஷ்ணசாமி பொன்னம்மா (வயது 65) பாலகிருஷ்ணன் வசந்தமலர் அல்லது செல்லக்கிளி (வயது 55) ஆகிய இருவரும் கொல்லப்பட்டனர்.

சுப்பிரமணியம் புஸ்பராணி. (வயது 28) அருள்நிதி பவானி [வயது 28] சுப்பிரமணியம் கர்ணன் [இரண்டரை வயது] ஆகிய மூவரும் படுகாயமடைந்தனர்.

ஷெல் விழுந்து வெடித்த சமயம் வீட்டில் தொட்டிலில் உறங்கிக் கொண்டிருந்த எட்டு மாத குழந்தை ஒன்று தெய்வாதீனமாக காயமின்றித் தப்பியது.

நேற்றைய ஷெல் வீச்சினால் வீடுகள் சில சேதமடைந்தன

வல்வை மாவட்ட அரசினர் ஆஸ்பத்திரிப்பகுதியில் விழுந்த ஷெல்லினால் ஆஸ்பத்திரிக்கு சிறு சேதமேற்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

(ஐ-173)

## அரச சார்பற்ற அமைப்புகள் கூட்டம்: கூட்டும் முயற்சி மீண்டும் தோல்வி

### பொலீஸார் தலையிட்டு நிறுத்தினர்

கொழும்பு, நவ. 17

இரத்மலானை தொழிலாளர் கட்டடத்தில் உள்நாட்டு வெளிநாட்டு அரச சார்பற்ற அமைப்புகள் இணைந்து நேற்று நடத்தவிருந்த ... டம் பொலீஸாரின் தலையீட்டினால் நிறுத்தப்பட்டது.

அவசரகாலச் சட்ட விதிகளின் கீழ் அந்தக் கூட்டத்தை ... என பொலீஸார் தெரிவித்தனர்.

யாழ்ப்பாணத்தில் இடம்

(4 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ்ப்பாணத்தை கைப்பற்றலாம்; ஆனால் இனப்பிரச்சினை தீராது!

## அமைச்சர் மகிந்த ராஜபக்ஷ தெரிவிப்பு

கொழும்பு, நவ. 17

இன்றோ நாளையோ யாழ். குடா நாட்டைக் கைப்பற்றி விடலாம். ஆனால் அதனல் இனப்பிரச்சினை தீர்ந்து விடாது.

— இவ்வாறு தெரிவித்திருக்கிறார் தொழில் தொழிற் பயிற்சி அமைச்சர் மகிந்த ராஜபக்ஷ.

கொழும்பு இலங்கை மன்றக் கல்லூரி கேட்போர் கூடத்தில் நேற்று முன்தினம் நடந்த அதிகாரப் பரவலாக்கல் தொடர்பான கருத்தரங்கில் உரையாற்றிய போதே அமைச்சர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

குடாநாட்டை இன்றோ நாளையோ அல்லது இன்னும் சில தினங்களிலோ பாதுகாப்புப் படையினர் கைப்பற்றி விடலாம். ஆனால் அடுத்து நடக்கப் போவது என்ன? இனப்பிரச்சினைக்கு நிரந்தர அரசியல்தீர்வு காணப்படா விட்டால் எதிர்காலத்தில் மேலும் பல பிரபாகரன்கள் உருவாகலாம். அவர்களை எதிர்த்து நாட்டின் இறைமையைப் பாதுகாக்க தெற்கில் பல இளைஞர்கள் முன்வருவர். அதில் சந்தேகமில்லை. இறைமையைக்காக்க யுத்தம் தொடரும். பலர் பலியாகிக் கொண்டே இருப்பார்கள்.

எனவே நாட்டின் யதார்த்தத்தை உணர்ந்து சகல தரப்பினரும் இனப்பிரச்சினைக்குத் தீர்வுகாண தமது பங்களிப்பை வழங்கவேண்டும். — என்றார். (ஐ)

## சின்னஞ்சிறு விளம்பரம்


### பெற்றுக் கொள்ளவும்

உங்கள் கலர் படங்களை பெற்றுக் கொள்ளவும். பேபி போட்டோ, திரு. T. நாகலிங்கம்] (விதானையார் வளவு) ஓட்டுவெளி ஆசைப்பிள்ளை ஏற்றம்) மிருசுவில். (39201)

### விற்பனைக்கு

குபோட்டா 500 மண்எண்ணெய் லாண்ட்மாஸ்டர் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: ராஜன். சிவன் கோவில் மட்டுவில். [39211]


## அரச அதிபர்கள் பேட்டி அளிக்க தடை விதிப்பு

யாழ்ப்பாணம், நவ. 17

வடக்கில் பணியாற்றும் அரச அதிபர்கள் தொடர்புச் சாதனங்களுக்கு பேட்டியளிப்பதற்கு அரசு தடை விதித்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

பொது நிர்வாக உள்நாட்டலுவல்கள் அமைச்சு செயலாளரின் அனுமதியை பெற்ற பின்பே தொடர்பு சாதனங்களுக்கு பேட்டி அளிக்க முடியும் என்றும் அரச அதிபர்களுக்கு தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-3)

## மஹோ' வந்தது

வடமராட்சி, நவ. 17

மண்எண்ணெய் மற்றும் உரம், மா என்பவற்றுடன் காங்கேசன்துறைக்கு வந்த மாஹோா கப்பல் நேற்றுக் காலை பருத்தித்துறைக்கு வந்து பொருள்களை இறக்கியது. [ஐ-173]

## இடருதவி முற்பணம் வழங்குக

யாழ்ப்பாணம், நவ. 17

இராணுவ நடவடிக்கையினால் பாதிக்கப்பட்ட சகல ஆசிரியர்களுக்கும் இடருதவி முற்பணம் வழங்கப்படவேண்டும் என்று இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம் வடக்கு - கிழக்கு மாகாண கல்வி அமைச்சையும் மற்றும் கல்வி நிர்வாகிகளையும் மகஜர் மூலம் கேட்டுள்ளது. (ஐ-11)

## கிழக்கை புலிகள் தாக்கலாமாம்

லண்டன், நவ. 17

வடக்கில் ராணுவ நடவடிக்கையில் ஈடுபட்டுள்ள படையினரின் கவனத்தை திருப்புவதற்காக கிழக்கில் புலிகள் தாக்குதல்களை அதிகரிக்கலாம்

மேற்கண்டவாறு பாதுகாப்பு வட்டாரங்கள் கருதுவதாக பி. பி. ஸி தெரிவித்தது.

கடந்த இரு தினங்களில் கிழக்கில் புலிகளின் தாக்குதல்கள் அதிகரித்து வருவதாகவும் பி. பி. ஸி தெரிவித்தது. (இ)

## ஐ நா.பணிமனை மூடப்பட்டதாக அறிவிப்பு

கொழும்பு, நவ. 17

ஆயிரக்கணக்கான அரச துருப்புக்கள் யாழ். நகர் மீது விடாது தாக்குதல் நடத்தி வருவதை அடுத்து அங்கு இயங்கிய அகதிகளுக்கான ஐ. நா தூதரகம் மூடப்பட்டிருப்பதாகவும்—

அங்கிருந்த தமது ஒரே பிரதிநிதியையும் ஏற்கனவே யாழ் நகருக்கு வெளியே அழைத்துக் கொண்டு விட்டதாகவும் —

ஐ. நா தூதரக அதிகாரி ஒருவர் அறிவித்துள்ளார் என்று ஏ. எப். பி செய்தி தெரிவித்தது [ஐ]

## 320 படையினர் இதுவரை பலி

கொழும்பு, நவ. 17

வலிகாமம் பகுதியில் ஸ்ரீலங்கா படையினர் பெரும் எடுப்பில் நடத்திவரும் ''சூரியப் பிரகாசம்'' இராணுவ நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டு இன்றுடன் ஒரு மாதம் பூர்த்தியாகியுள்ளது.

இந்த இராணுவ நடவடிக்கையில் இதுவரை 320 படையினர் கொல்லப்பட்டிருப்பதாக இராணுவப் பேச்சாளர் தெரிவித்திருக்கிறார்.

ஸ்ரீலங்கா படையினர் தங்கள் வளங்கள் அனைத்தையும் உச்சமாகப் பயன்படுத்தி மேற்கொண்டுவரும் இப்படை நடவடிக்கையில் இராணுவம் பெரும் இழப்புக் [illegible] கூறியுள்ளனர். [ஐ]


கருகம்பனை இராசஇராசேஸ்வரி சி. க. கூ. சங்க

## அறிவித்தல்

மேற்படி சங்க செயலாளர்
திருமதி த. நளினராணியையும்
பொருளாளர்
திரு. இ. மாணிக்கவாசகர்

அவர்களையும் மற்றும் நிர்வாக சங்க உறுப்பினர்களையும் சேதுகாவலப் பிள்ளையார் கோவிலடி மறுவன்புலம் வடக்கில் வசிக்கும் வே. குமாரவேல் தொடர்பு கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறார்.

(39218)

## அறிவித்தல்

நல்லூரில் இயங்கிக் கொண்டிருந்த அகதிகள் புனர்வாழ்வு நிதியம் — 1983 காரியாலயம் தற்காலிகமாக பின்வரும் விலாசத்தில் இயங்க ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது.

### அகதிகள் புனர்வாழ்வு நிதியம் 1983

### R R.F. – 1983

ஊற்று நிறுவனக் காரியாலயம்,
புலோலி தெற்கு, பருத்தித்துறை.

இவ்வறிவித்தலை இடம்பெயர்ந்துள்ள இயக்குநர் சபை உறுப்பினர்கள், உத்தியோகத்தர்கள், ஊழியர் அரசசார்பற்ற நிறுவனங்களின் இணையம் மற்றும் தொடர்பகங்களுக்கும் அறிவிக்க விரும்புகிறேன்.

வ. பரமசிவம்
நிர்வாகப் பொறுப்பதிகாரி

ஊற்று நிறுவனக் காரியாலயம்,
பிரதான வீதி,
பருத்தித்துறை, (39212)

## தேடுகின்றோம்

திருகோணமலை உப்புவெளியில் இருந்து வந்து சுதுமலை அம்மன் கோவிலடியில் வசித்து வந்த திருமதி ரவி - சாந்தியையும் பிரதீபன், ரதீபன் ஆகிய மூவரையும், திருமலை அம்மம்மா திருமதி தவமணி செலவராசாவும், நீர்வேலி மணியம் மாமாவும் தேடுகின்றார்கள்.

தொடர்பு:- செ. சுப்பிரமணியம்
சோமு மரவேலை தொழிற்சாலை
சாவகச்சேரி ஆஸ்பத்திரி முன்பாக
கண்டி வீதி, — சாவகச்சேரி.

(39215)

## அவசர அழைப்பு

தாவடி மானிப்பாய் சாலையில்
இதுவரை இயங்கிவந்த
அளவை இனிப்புத் தொழிலகம்

கீழ்க்காணும் முகவரியில் தொடர்ந்து இயங்கவேண்டி இருப்பதால் ஊழியர்கள் அனைவரையும் 18-11-1995 ஆம் திகதிக்கு முன்னர் சமுகமளிக்குமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

### அளவை இனிப்புத் தொழிலகம் "சண் பிறான்ட்"

வீரவாகு கட்டடம், பருத்தித்துறை.

(39196)

## தேடுகின்றார்

கரம்பன் மேற்கைச் சேர்ந்தவரும், கொழும்பு கொம்பனித்தெருவில் வேலை செய்பவருமாகிய முத்தையா சச்சிதானந்தனை கிளிநொச்சி கந்தசாமி கோவிலுக்கு உடனடியாக வர வேண்டுகிறேன்.

நித்தியானந்தன்

(39216)

## தயவுசெய்து வந்து சந்திக்கவும்

1. சட்டத்தரணி திருமதி லிங்கா துரைராஜா
2. செல்வி தேவகி வேலாயுதபிள்ளை [கொக்குவில்]
3. திரு. யோகரட்ணம் (கந்தரோடை)
4. செல்வி கங்கேஸ்வரி சர்மா (பிரப்பங்குளம்)

க. கனகராசா
மில்க்வைற்
மே/பா. தேவர்ஆட்டிஸ்ற்
கண்டி வீதி,
மீசாலை கிழக்கு,
மீசாலை.

(39217)

## சந்திக்கவும்

நாயன்மார்கட்டைச் சேர்ந்த திரு. இராமலிங்கம் இராசா (நொத்தாரிஸ்) என்பவரை கானகன் வீதி, மீசாலை வடக்கைச் சேர்ந்த திரு. சின்னப்பு நல்லதம்பி உடனடியாக சந்திக்கும்படி வேண்டுகிறார்.

சி. நல்லதம்பி

(39209)

## அறிய விரும்புகிறோம்

உரும்பராயைச் சேர்ந்த

### DR C. இந்திரராஜா

(இருதய நோய் நிபுணர்)

இப்போது தங்கியிருக்கும் [தற்போதைய] முகவரியை அறியவிரும்புகிறோம்.

சுவாமி சித்ருபானந்தா
ஸ்ரீராமகிருஷ்ண சாரதா
சேவாச்சிரமம்

பருத்தித்துறை. (சி-2548)

## வெதுப்பக தொழிலாளர்கள் உடன் தேவை

எமது சங்க வெதுப்பகத்திற்கு அனுபவமுள்ள தொழிலாளர்கள் தேவை. தகுதியுடையவர்கள் அலுவலக நேரங்களில் எம்முடன் நேரில் தொடர்பு கொண்டு விவரங்களைப் பெற்றுக் கொள்ளலாம்.

பொதுமுகாமையாளர்

புலோலி பல நோக்கு கூட்டுறவுச் சங்கம் (வ.து)
புலோலி கிழக்கு, பருத்தித்துறை.
(சி/2547)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உதயன்

## இடம்பெயர்வின் படிப்பினை

ஸ்ரீலங்கா இராணுவத் துருப்புக்கள் யாழ்ப்பாண நகரை மிகவும் அண்மித்து விட்டன. நகரத்தின் மீதான இறுதித் தாக்குதலுக்கு அவை தயாராகிக் கொண்டிருக்கின்றன. விடுதலைப் புலிகள் நடத்தக்கூடிய பெருந்தாக்குதலுக்கு முகம் கொடுத்து தமது இலக்கை அடைவதில் துருப்புக்கள் மன உறுதியுடன் முன்னிற்கின்றன —

இவ்வாறு ஸ்ரீலங்காவின் படை அதிகாரிகள் கூறியதாக நேற்றுக் காலையில் செய்தி ஏஜென்ஸி ஒன்று தெரிவித்தது.

யாழ்ப்பாண நகரைக் கைப்பற்றும் இராணுவ நடவடிக்கைக்காக பலாலி முகாமில் 30,000 முதல் 40,000 வரையிலான துருப்புக்கள் குவிக்கப்பட்டிருப்பதாக முந்திய தகவல்கள் தெரிவித்தன.

ஆனால் முன்னேற்ற நடவடிக்கையில் பதினையாயிரம் சிப்பாய்களே ஈடுபட்டிருப்பதாக அரசாங்கத் தரப்பில் இப்போது கூறப்படுகிறது.

இராணுவத் தரப்பில் தெரிவிக்கப்படும் தகவல்கள், புள்ளி விவரங்கள் எப்போதுமே பொய்யானவையும், தவறானவையுமாகும். இது எல்லோருக்கும் தெரிந்தது தான்.

யாழ்ப்பாண நகரை ஆக்கிரமிப்பதற்கு பதினையாயிரம் துருப்புக்களே அணிவகுத்து முன்னேறுவது உண்மையாயின், வலிகாமம் தமிழ் இளைஞர்கள் அத்தனை பேரும் வெட்கித் தலை குனிய வேண்டும்.

விடுதலைப் புலிகள் தரப்பில் பதினையாயிரம் போராளிகளாக இந்த இளைஞர்களில் ஒரு பகுதியினரேனும் மாறியிருப்பின் —

பதினையாயிரம் இளைஞர்கள் விடுதலைப் புலிகள் இயக்கில் இணைந்திருப்பின் —

இத்தனை லட்சம் பொது மக்களும், தமது சொத்துக்களையும், தேட்டங்களையும் கைவிட்டு, அவசர அவசரமாக இடம்பெயர்ந்திருக்க வேண்டிய தேவை உருவாகி இருக்காது. இல்லையா?

ஒரு சமுதாயத்தின் உயிர் நாடியாக, பாதுகாப்பு அரணாக விளங்க வேண்டியவர்கள் அந்த சமூதாயத்தைச் சேர்ந்த இளைஞர், யுவதிகளே.

ஆனால் —

போராடுவதற்கென்று ஒரு சிலர் இருக்கிறார்கள். நாம் எமது சோலியைப் பார்ப்போம் என்று வீண் பொழுது போக்கி உடம்பு வளர்த்த இளைஞர், யுவதிகளே வலிகாமம் பகுதியில் அனேகராக இருந்தனர்,

தங்கள் பிள்ளைகள் தான் பிள்ளைகள்; அடுத்தவனும் ஒரு தாயின் பிள்ளையே என்று நினையாது, தமது பிள்ளைகளைப் பொத்தி வளர்த்த பெற்றோருக்கு இடம்பெயர்ந்து வாழும் அவலம் ஒரு நல்ல படிப்பினை.

சம்பவங்கள், வரலாறுகளில் இருந்து பாடம் கற்கத் தவறும் சமூகம் ஒருபோதும் நிமிர்ந்து நிற்க முடியாது. தமிழ் மண்ணிலேயே இடம் பெயரும் நிலை மீண்டும் வராமல் தடுப்பதற்கு இப்போதைய சம்பவம் சகல தமிழருக்கும் படிப்பினையாக அமைய வேண்டும்.

தமிழர்கள் தங்களைத் தாமே காப்பாற்ற படை அணிதிரள்வதை விட வேறு எந்த மாற்றுவழியும் இல்லை என்பதனை இடம்பெயர்ந்த சம்பவத்திலிருந்துஎல்லோரும் கற்றுக்கொள்வோமாக. இளைஞர், யுவதிகளுக்கு இது விசேட பாடமாகட்டும்.

# அரசின் கெடுபிடிகளுக்கு எதிராக
# தொண்டர் அமைப்புகள் போர்க்கொடி

யாழ்ப்பாணம், நவ. 17

வடக்கில் அவதியுறும் மக்களுக்கு தொண்டர் அமைப்புக்கள் நேரடியாக நிவாரணப் பொருள்களை அனுப்ப அரசு விதித்துள்ள தடையை எதிர்த்து தொண்டர் அமைப்புக்கள்போர்க்கொடி உயர்த்தியுள்ளன.

வடக்கில் உள்ள மக்களுக்கு உணவு மற்றும் அத்தியாவசியப் பொருள்களை நிவாரணமாக வழங்க விரும்பும் தொண்டர் அமைப்புக்கள் விரும்பினால் புனர்வாழ்வு, புனரமைப்பு அமைச்சுஊடாக அவற்றைக் கையளிக்கலாம் என்று அரசு தொண்டர் அமைப்புக்களை கேட்டுள்ளது.

யாழ்ப்பாணத்தில் உள்ள தமது அமைப்புக்கள் ஊடாகவே தமது நிவாரணப் பணிகளை மேற்கொள்ள வேண்டியுள்ளதால், நிவாரணப் பொருள்களை நேரடியாக எடுத்துச் சென்று விநியோகிக்க அனுமதிக்குமாறு தொண்டர் அமைப்புகள் அரசிடம் கோரியுள்ளன.

நிவாரணப் பொருள்களை வடக்கே எடுத்துச் செல்ல அனுமதிக்காபதட்சத்தில்சர்வ தேச அமைப்புக்கள் மூலமும்' ஐ.நா.சபை மூலமும் ஸ்ரீலங்கா அரசாங்கத்துக்கு அழுத்தம் கொடுக்கவிருப்பதாக சர்வ தேச தொண்டர் அமைப்பு பிரதிநிதி ஒருவர் தெரிவித்தார்.

[இ-3]

## பல்கலை ஊழியர்களுக்கு

யாழ்ப்பாணம், நவ. 17

யாழ். பல்கலைக் கழகத்தைச் சேர்ந்த ஆசிரியர்கள் உத்தியோகத்தர்கள் ஊழியர்கள் அனைவரையும் சாவகச்சேரி றிபேக் கல்லூரிக்கு அருகில் உள்ள தமிழீழ நீதி மன்றக்கட்டடத்தில் நாளை சனி முற்பகல் 10 மணிக்கு சமூகமளிக்குமாறு பதிவாளர் கேட்டுள்ளார்

(ஐ)

## இடம்பெயர்ந்தோருக்கு கெயர் அமைப்பு உதவி

யாழ்ப்பாணம், நவ. 17

வலிகாமத்தில் இருந்து இடம்பெயர்ந்துள்ள மக்களுக்கு பல்வேறு வகையான உதவிகளை கெயர் இன்ரர்நஷனல் அமைப்பு வழங்கி வருகிறது.

2 ஆயிரத்து 500 குடும்பங்களுக்கு பாய், படுக்கை விரிப்பு, கோப்பைகள் ஆகியவற்றை இந்த அமைபபு வழங்கவிருப்பதாக தெரிவிக்பட்டது.

வரணி இயற்றாலை முகாமில் உள்ள 122 குடும்பங்களுக்கும் —

பருத்தித்துறை புற்றளை வித்தியாலயம், வட இந்து மகளிர் கல்லூரி, சாவகச்சேரி றிபேக் கல்லூரி ஆகியவற்றில் தங்கியிருக்கும் ஆயிரத்து 200 குடும்பங்களுக்கும்— நேற்று இந்த உதவி வழங்கப்பட்டது.

ஏனைய முகாம்களில் உள்ளவர்களுக்கும் இந்த உதவி வழங்கப்படவிருக்கிறது. (இ-3)

## நிதித்துறை அறிவிப்பு

யாழ்ப்பாணம், நவ. 17

கீழ்க்குறிப்பிடப்படும் இரு விலாசதாரர்களையும் கச்சாய் வீதி, சாவகச்சேரியில் அமைந்துள்ள தமிழீழ வைப்பகத்துக்கு தங்கள் அடையாள ஆவணங்களுடன் இன்று வெள்ளி முற்பகல் 11 மணிக்கு வருகை தருமாறு நிதித்துறையினர் அறிவித்துள்ளனர்.

திருமதி இராசபூரணம் கந்தையா — இல.114 திருமகள் வீதி, அரியாலை.

திருமதி யோகேஸ்வரி ஜெகநாதன் — இல. 77 பாரதி வீதி, சுண்டிக்குழி, யாழ்ப்பாணம். (ஐ)

# வடமராட்சியிலிருந்து தென்மராட்சிக்கு பாண்

## லொறிகளில் ஏற்றி வந்து விற்பனை

தென்மராட்சி, நவ. 17

தென்மராட்சியில் பாணுக்கு பெரும் தட்டுப்பாடு நிலவி வருவதால் வடமராட்சிப் பகுதியைச் சேர்ந்த ப.நோ.கூ. சங்கங்கள் பாணைத் தயாரித்து தென்மராட்சிப் பகுதியில் விநியோகித்து வருகின்றன.

வடமராட்சி கிழக்கு பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம், கட்டைவேலி பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம் ஆகியவை தென்மராட்சிப் பகுதியில் தஞ்சமடைந்துள்ள மக்களுக்கு தினமும் லொறிகளில் பாண் எடுத்துவந்து விற்பனை செய்து வருகின்றன

ஒரு றாத்தல் பாண் ரூபா 6. 50 வீதம் வழங்கப்படுகின்றது.

பொதுமக்கள் கூடுதலாகத் தங்கியுள்ள சாவகச்சேரி, கொடிகாமம் ஆகிய பகுதிகளில் வைத்து பாண் விநியோகிக்கப்படுகிறது.

இதேவேளை—

சாவகச்சேரி பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்தினர் தினமும் 5 ஆயிரம் இறாத்தல் பாணை சங்கக் கிளைகள் மூலம் மக்களுக்கு வழங்கி வருகின்றனர்.

சங்க வெதுப்பகத்தில் தயாரிக்கப்படும் 2 ஆயிரத்து 500 இறாத்தல் பாணும், வடமராட்சி கிழக்கு பலநோக்குக் கூட்டுறவுச் சங்க பேக்கரியில் இருந்து பெறப்படும் 2 ஆயிரத்து 500 இறாத்தல் பாணும் சங்கத்தின் சகல கிளைகள் மூலமும் வழங்கப்பட்டு வருவதாக சங்க பொது முகாமையாளர் தெரிவித்தார்,

# ஷெல்லுக்கு பலியானவரின் லாண்ட் மாஸ்ரர் கடத்தல்

## காவல்துறையினர் கண்டுபிடித்தனர்

யாழ்ப்பாணம், நவ. 17

கடந்த திங்களன்று நாவற்குழிச் சந்திக்குச் சமீபமாக ஷெல் தாக்குதலுக்கு இலக்காகி உயிரிழந்தவர் ஓட்டிவந்த ''லாண்ட் மாஸ்ரர்'' தக்க தருணம் பார்த்து திருடர்களால் கடத்தப்பட்டது.

கடத்தப்பட்ட அந்த 'லாண்ட் மாஸ்ரர்' பின்னர் இடம்பெயர்ந்த மக்களை ஏற்றிக் கொண்டு சென்றுகொண்டிருந்த சமயம் கொடிகாமம் பகுதியில் வைத்து காவல் துறையினரால் கண்டுபிடிக்கப்பட்டது.

அதனை ஓட்டிச் சென்றவர் கைது செய்யப்பட்டார்.

கொக்குவிலைச் சேர்ந்த வைத்திலிங்கம் ஜீவகுமார் என்பவர் தனது இந்த 'லாண்ட் மாஸ்ரரை' ஓட்டிச் சென்று கொண்டிருந்த சமயம் ஷெல்லுக்குப் பலியானார்.

அவர் கொல்லப்பட்ட பின்னர் சடலத்தை ''லாண்ட் மாஸ்ரரில்'' இருந்து அகற்றி விட்டு அதனைக் கடத்திச் சென்றமை தெரியவந்துள்ளது. (ஐ-117)

# குமண அடுத்த வாரம் பருத்தித்துறை வரும்

யாழ்ப்பாணம், நவ. 17

உணவு மற்றும் அத்தியாவசியப் பொருள்களுடன் 'குமண' கப்பல் அடுத்த வாரம் பருத்தித்துறைக்கு வந்து சேரவிருக்கிறது.

பொருள்கள் ஏற்றப்பட்ட நிலையில் வடக்கே புறப்பட தயாராக இக்கப்பல் இருப்பதாகவும் —

பருத்தித்துறை துறைமுகத்தில் தரித்து நிற்கும் மாஹோ கப்பலில் பொருள் இறக்கி முடிந்ததும் இக்கப்மல் பருத்தித்துறைக்கு வரும் என்றும் — தெரிவிக்கப்பட்டது.

இக்கப்பலில் ஒரு தொகுதி தபால் பொதிகளை எடுத்து வர முயற்சி எடுக்கப்பட்டுள்ளது. (இ-3)

## யாழ். ஆஸ்பத்திரி மந்திகையில்

# இன்றுமுதல் படிப்படியாக சேவைகளை ஆரம்பிக்கும்

வடமராட்சி, நவ. 17

மந்திகையில் அமைந்துள்ள யாழ். போதனா வைத்திய சாலை இன்று வெள்ளிக்கிழமை முதல் படிப்படியாக தனது கருமங்களை ஆரம்பிக்கும் என்று தெரிவிக்கப்படுகிறது.

சிற்றூழியர்களின் சேவை இன்று முதல் முழுமையாகப் பெறப்படும் என்றும்—

'கிளீனிக்'குகள் ஒவ்வொன்றாக ஆரம்பிக்கப்படும் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

யாழ். போதனா வைத்திய சாலையின் நிர்வாகப் பணியகம் மந்திகை அரசினர் வைத்தியசாலையின் மேல் மாடி அறைகளில் இயங்கும்.

இதற்கான வேலைகளும் சுறுசுறுப்பாக மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

(இ-173)

# மக்கள் அற்ற சூனியப் பிரதேசமாக காட்சி தரும் யாழ். நகரப் பகுதி

## நாய்கள் ஈனக்குரல் எழுப்புகின்றன

யாழ்ப்பாணம். நவ. 17

யாழ். நகரப் பகுதிகள் தற்போது மக்கள் எவருமற்ற சூனியப் பிரதேசமாக காணப்படுவதாக அங்கிருந்து கடைசி நேரத்தில் வெளியேறியவர்கள் தெரிவித்தனர்.

குடாநாட்டில் மக்கள் மிக நெரிசலாக வாழ்ந்த பகுதியாகக் கருதப்பட்ட யாழ். நகர வீதிகள் வெறிச்சோடிக் கிடக்கின்றன.

நாய்களின் ஈனமான ஊளைச் சத்தங்கள் — கால்நடைகளின் அவலக் குரல்கள் அப்பகுதிகளில் இன்னும் கேட்டுக்கொண்டிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

பாதுகாப்பான இடங்களை நோக்கி வெளியேறிய மக்கள் பலர் செல்லமாக வளர்த்து வந்த தமது நாய்களையும், மற்றும் கால்நடைகளையும் கைவிட்டு வந்திருந்தனர்.

இந்த நாய்களும், கால்நடைகளுமே தற்போது உணவு, தண்ணீர் இன்றி அலைந்து ஈனக்குரல் எழுப்புகின்றன.

உணவு இன்றி பல நாய்கள் வீதிகளில் இறந்து கிடக்கின்றன. இறந்த நாய்கள் காகங்களுக்கு இரையாகின்றன. சில நாய்கள் பசி தாங்காது இறந்த நாய்களையும் உண்கின்றன. இறந்த நாய்கள், கால்நடைகளின் [illegible] ஊர் எங்கும் துர்நாற்றம் வீசுகின்றது.

பாதுகாப்புக் கருதி உடனடியாக தமது இருப்பிடங்களில் இருந்து வெளியேறியவர்கள் பின்னர் பல தடவைகள் திரும்பிவந்து தமது எஞ்சிய பொருள்களையும், இறுதியாக கால்நடைகளையும் கொண்டு சென்றுவிட்டனர்.

அங்கு தங்கி இருந்துவிட்டு கடைசி நேரத்தில் அவசரம் அவசரமாக வெளியேறியோரே தமது கால்நடைகளைக் கைவிட்டு வந்திருந்தனர்.

படையினரின் கடுமையான ஷெல், பீரங்கித் தாக்குதல்கள் காரணமாக யாழ். நகரப் பகுதிக்குள் தற்போது எவரும் செல்லமுடியாத நிலை இருந்து வருகிறது.

(இ-15)

## பருத்தித்துறை ஊடாக மினிபஸ் சேவை

வடமராட்சி, நவ. 17

பருத்தித்துறையில் இருந்து நெல்லியடி, சரசாலை, கனகம்புளியடி ஊடாக சாவகச்சேரிக்கும் —

பருத்தித்துறையிலிருந்து நெல்லியடி வரணி ஊடாக கொடிகாமத்திற்கும் — மினிபஸ்மற்றும் தட்டி வான்கள் சேவையில் ஈடுபடுத்தப்பட்டு வருகின்றன.

இதேவேளை சாவகச்சேரி பளை பகுதிக்கான மினிபஸ் சேவைகளும் நடைபெற்றுவருகின்றன. (இ-173)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வடக்கே பணம் எடுத்து வர படையினர் புது கட்டுப்பாடு

யாழ்ப்பாணம், நவ. 17

வவுனியா தாண்டிக்குளம் ஊடாக வடக்கே பணம் எடுத்து வருவதற்கு படையினர் புதிய கட்டுப்பாடுகளை விதித்துள்ளனர்.

இதன்படி 50 ஆயிரம் ரூபா வரையிலான பணத்தை எடுத்து வருவதானால் வவுனியா பிரிகேடியரின் அனுமதி பெறவேண்டும் என்றும்—

அதற்கு கூடுதலான பணத்தை எடுத்து வருவதானால் பாதுகாப்பு இணைப்புக் குழுவின் அனுமதிபெறவேண்டும் என்றும் — தெரிவிக்கப்படுகிறது.

தற்போது அனுமதி இன்றி சுமார் 5 ஆயிரம் ரூபா வரையிலான பணத்தை மட்டுமே எடுத்து வர தாண்டிக்குளத்தில் படையினர் அனுமதிக்கின்றனர் என்று கூறப்படுகிறது.

அதேசமயம் பணக் கையிருப்பு இல்லாத நிலையை வங்கிகள் தொடர்ந்து எதிர்நோக்கி வருகின்றன. (இ-3)

# இடம்பெயர்ந்தோரின் உணவுப் பிரச்சினை

## கூட்டுறவு ஆணையாளர் ஆராய்வு

வலிகாமத்திலிருந்து இடம்பெயர்ந்துள்ள மக்கள் எதிர்நோக்கும் உணவுப் பிரச்சினையை ப.நோ.கூ. சங்கங்கள் மூலம் தீர்ப்பதற்கு தேவையான ஏற்பாடுகள் பற்றி ஆராய வடக்கு கிழக்கு மாகாணசபை கூட்டுறவு ஆணையாளர் சு.டிவகலாலா சாவகச்சேரிக்கு வந்துள்ளார்.

ப.நோ.கூ. சங்கங்களுக்கு தேவையான பொருள்களை கப்பல் மூலம் எடுத்து வருவது தொடர்பாக அவர் ப.நோ. கூ. சங்கப் பிரதிநிதிகளுடன் ஆராய்வார்.

# உறவினர்களைப் பிரிந்து அலையும் வயோதிபர்கள்

## வீதிகளில் மயங்கி விழுகின்றனர்

யாழ்ப்பாணம், நவ 17

வலிகாமம் பகுதியில் இடம்பெறும் இராணுவ நடவடிக்கைகளுக்கு அஞ்சி தென்மராட்சிப் பகுதிக்கு இடம்பெயர்ந்துள்ள முதியோர்கள் பலர் உறவினர்களைப் பிரிந்த நிலையில் வீதிகளில் அலைந்து திரிகின்றனர்.

இவ்வாறு உணவு, இருப்பிடம் இன்றி அலையும் முதியோர்கள் பலர் வீதிகளில் திடீர் திடீரெனமயங்கி விழுகின்றனர்.

இவ்வாறு வீதிகளில் மயக்கமடைந்த வயோதிபர்கள் ஐவர் வழிப்போக்கர்களின் உதவியுடன் சாவகச்சேரி ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். நெருக்கடிமிக்க இந்நேரத்தில் இவர்களைப் பராமரிப்பதில் ஆஸ்பத்திரி ஊழியர்கள் சிரமப்படுகின்றனர்.

இதேவேளை —

சுமார் 70 வயது மதிக்கத்தக்க வயோதிபர்ஒருவர் சாவகச்சேரி சந்தை உட்புறத்தில் நேற்றுக் காலை சடலமாகக் கிடக்கக் காணப்பட்டார்.

இச் சடலம் அடையாளம் காண்பதற்காக சாவகச்சேரி ஆஸ்பத்திரியில் காவல்துறையினரால் ஒப்படைக்கப்பட்டுள்ளது. (ஐ-13)


## உடன் சந்திக்கவும்

காலஞ்சென்ற இராமநாதனின் மனைவி திருமதி இராமநாதனையும், அவரது மகள் எழிலியையும், கல்வியங்காடு முத்தையா மாஸ்ரரின் மருமகன் பொன்னம்பலம் அம்பலவாணரையும் [266/B, நாஷனல் மோட்டேஸ் ஸ்ரான்லி வீதி] 150, கண்டி வீதியிலுள்ள ஸ்ரீ விக்னேஸ்வரா ஸ்ரோர்ஸில் உடன் சந்திக்குமாறு திரு. செ. கனகரத்தினம் கேட்டுக் கொள்கிறார்.

ஸ்ரீ விக்னேஸ்வரா ஸ்ரோர்ஸ்,
150, கண்டி வீதி,
சாவகச்சசரி. [39210]


## மரண அறிவித்தல்கள்

### கதிரவேலு குழந்தைவேலு

(இளைப்பாறிய அதிபர் விவேகானந்த வித்தியாலயம் மானிப்பாய்)

கதிரவேலு குழந்தைவேலு இளைப்பாறிய அதிபர் விவேகானந்த வித்தியாலயம் மானிப்பாய் 8 - 11 – 95 புதன்கிழமை காலமானார்.

அன்னார் மீனாம்பிகையின் அன்புக் கணவரும், குலரட்ணம் (அமெரிக்கா), கலாவதி, குலேந்திரன், வித்தியாவதி (அமெரிக்கா) ரவீந்திரன் (இத்தாலி), உஷாவதி, றூபேந்திரன் (கொழும்பு), சித்திராவதி (கனடா), யமுனாவதி, கங்காவதி (கனடா) ஆகியோரின் அன்புத் தந்தையாரும், அதிஷ்ரரட்ணம் (Bobby), கிருஷ்ணலீலா, ஜோசேப் மறியாம்பிள்ளை, அனுஸ்சியா, ஆன், பிரபாகரன், ஜெய்குமார், ராஜேந்திரன் ஆகியோரின் அன்பு மாமனாரும், சிந்துஜா, மிர்நாளன், மிருஜா, தனுஜா, பிரியந்தன், மயூரா, பாமதி, டிலான், அஜந்தன், மிதுனா, மீனா, லாவண்யா, சாரணன் ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் 8 - 11 - 95 புதன்கிழமை மாலை 3.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பிப்பிலி மயானத்தில் தகனக் கிரியைகள் நடைபெற்றன. இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
கு. குலேந்திரன்
(மகன்)

நவாலி தெற்கு,
மானிப்பாய். (39219)

### சவரிமுத்து ஜேம்ஸ்

நாரந்தனையைப் பிறப்பிடமாகவும் மிருசுவிலை வசிப்பிடமாகவும் கொண்ட சவரிமுத்து ஜேம்ஸ் நேற்று 16 –1- 95 இல் காலமாகிவிட்டார்.

இவர் கிரிஸ்ரினாவின் அன்புக்கணவரும், உத்திரா, செல்வேந்திரா ஆகியோரின் பாசமிகு தந்தையும் ஆவார்

அன்னாரின் இறுதிச் சடங்குகள் நாளை (18–10–95) காலை 9 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் நல்லடக்கத்திற்காக மிருசுவில் சேமக்காலைக்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
J உத்திரா (மகன்)

செல்வ மஹால்
மிருசுவில் (39214)

# விடுதலைப் போராட்டத்தில் இணைய மக்கள் காட்டிவரும் ஆர்வம்

யாழ்ப்பாணம், நவ. 17

வலிகாமம் பகுதியில் செறிவான மக்கள் குடியிருப்புக்களை நாசப்படுத்தியவாறு அரச படைகள் மேற்கொள்ளும் முன்னேற்ற நடவடிக்கைகளையடுத்து—

இலட்சக்கணக்கில் வன்னி மற்றும் வடமராட்சி, தென்மராட்சிக்கு இடம்பெயர்ந்துள்ள மககள் விடுதலைப் போராட்டத்துக்கு வலுச் சேர்ப்பதில் அக்கறை காட்டி வருகின்றனர்.

கூடுதலான எண்ணிக்கையில் இளைஞர், யுவதிகள் விடுதலைப் போராட்டத்தில் இணைந்து வருகிறார்கள்.

இதனைவிட பெற்றோர்கள் மனம் உவந்து தமது பிள்ளைகளை போராட்டத்தில் இணைத்தும் வருகின்றனர்.

இடம்பெயர்ந்தோர் முகாம் ஒன்றில் நேற்று ஒருதாயார் தமது மகளை ஏனைய இடம்பெயர்ந்த மக்களின் முன்னிலையில் விடுதலைப் போருக்காக போராளிகளிடம் ஒப்படைத்தார்.

இயற்கையாகவே தமது கால் நடக்க முடியாது இருந்த போதிலும் இணுவிலைச் சேர்ந்த இளைஞர் ஒருவர் இயக்கத்தில் சேர முன் வந்தார். (இ-3)

# இந்தியாவைத் தலையிட கோருகிறது தி.மு.க.

## நரசிம்மராவை சந்தித்து பேச்சு

புதுடில்லி, நவ 17

யாழ்ப்பாணத்தில் அப்பாவித் தமிழ் மக்கள் மீது ஸ்ரீலங்கா அரசு மேற்கொண்டுள்ள யுத்தத்தை உடன் தடுத்து நிறுத்த இந்திய அரசு தலையிட வேண்டும்.

பிரதமர் நரசிம்மராவிடம் தி.மு.க. இவ்வாறு கோரிக்கை விடுத்துள்ளது.

தி.மு.கவைச் சேர்ந்த பசும்பொன் டி. கிட்டினன், பீஸா ஆர். கணேசன், மொகமது சாயி ஆகியோர் கொண்ட தூதுக்குழு ஒன்று பிரதமர் நரசிம்மராவை புதுடில்லியில் செவ்வாயன்று சந்தித்த சமயம் அவரிடம் இக் கோரிக்கை விடுக்கப்பட்டது.

பிரதமருடன் நடத்திய பேச்சுக்களில் யாழ்ப்பாணத்தில் தமிழ் மக்கள் மீது நடக்கும் விமான, ஷெல் தாக்குதல் உயிரிழப்பு குறித்தும், மனித உரிமை மீறல் குறித்தும் எடுத்துக்கூறிய தி மு க. பிரதிநிதிகள் மகஜர் ஒன்றையும் பிரதமரிடம் கையளித்தனர்.

## அரச...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

பெயர்ந்துள்ள பெருவாரியான மக்களின் நிலைவரம் மற்றும் நிவாரணப் பணிகள் தொடர்பாக ஆராயும் இக் கூட்டம் மூன்னர் பெந்தோட்டை ஹோட்டலில் நடைபெறவிருந்தது. ஆனால் சிங்கள இனவாதக் கும்பல்களின் கடும் எதிர்ப்பினால் அங்கு அது நடைபெறவில்லை. (ஐ-6)

## வலிகாமம்...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

வரியை சாவகச்சேரி கச்சாய் வீதியில் அமைந்துள்ள தென்மராட்சி, கோட்ட வருவாய் பகுதிச் செயலகத்தில் செலுத்தும்படியும் —

வலிகாமம் பகுதியிலிருந்து தென்மராட்சி, வடமராட்சி ஆகிய இடங்களில் இடம்பெயர்ந்து தற்காலிக வாணிபம் அல்லது தொழில் முயற்சியில் ஈடுபட்டுள்ள அனைவரையும் தற்காலிக இடமாற்ற பதிவுச் சான்றிதழை மேற்படி தென்மராட்சி வருவாய்ப் பகுதிச் செயலகத்தில் பெற்றுக்கொள்ளும்படியும்— நிதித்துறையினர் வேண்டுகோள் விடுத்துள்ளனர். (இ)

## நேர் எதிராக ..

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

அரசு தனது பிரசார சாதனங்களை முடுக்கி விட்டுள்ளதாக அரசியல் அவதானிகள் தெரிவித்தனர். (இ-3)

## ராணுவத்...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

முடியாது என்றும் கரிகாலன் தெரிவித்தார்.

தற்போதைய இராணுவ நடவடிக்கை பெரிதாக உள்ள போதிலும் விடுதலைப் புலிகள் [illegible] வார்கள் என்றும் அவர் கூறினார். (இ-ஐ-3)

# கொழும்பில் தமிழர்கள் துன்புறுத்தப்படுகின்றனர்

## மனித உரிமை குழுக்கள் கண்டனம்

கொழும்பு, நவ. 17

கொழும்பில் படையினரின் சுற்றிவளைப்புகளின் போது கைது செய்யப்படும் தமிழர்கள் கடுமையாகத் துன்புறுத்தப்படுவதாக மனித உரிமைகளைப் பாதுகாக்கும் அமைப்புகள் குற்றஞ்சாட்டியுள்ளன.

ஜனாதிபதி, பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் மற்றும் முக்கிய அரசுத் தலைவர்களைக் கொல்வதற்காக விடுதலைப்புலிகளின் தற்கொலை படையினர் 30 பேர் கொழும்பினுள் ஊடுருவியுள்ளனர் என நம்பும் பொலீஸார் கொழும்பிலும் சுற்றுப்புறங்களிலும் உள்ள ஹோட்டேல்கள், லொட்ஜ்கள் என்பவற்றில் திடீர் சோதனைகளை நடத்திவருகின்றனர்.

வடபகுதியைச் சேர்ந்த தமிழர்களே இதனால் பெரிதும் துன்புறுத்தப்படுவதாக மனித உரிமை அமைப்புகள் குற்றஞ்சாட்டியுள்ளன என்று ''வெரிந்தாஸ்'' வானொலி தெரிவித்தது. (ஐ-6)

# நிவாரணப் பொருள்களை யாழ். எடுத்துவர முயற்சி

குடாநாட்டில் அவலநிலையில் உள்ள மக்களுக்கு கூடுதலான நிவாரணப் பொருள்களை அனுப்ப ஏற்பாடு செய்யப்படும்.

கெயர் இன்ரர் நஷனல் அமைப்பின் வடபிராந்திய தொழிற்பாட்டு அதிகாரி எடிங் போயில் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

கடந்த வாரம் யாழ்ப்பாணம் வந்திருந்த அவர் பல அகதி முகாம்களுக்கு விஜயம் செய்து மக்கள் அனுபவிக்கும் கஷ்டங்களை கேட்டறிந்தார்.

இடம்பெயர்ந்த மக்களின் இருப்பிட, உணவு வசதிகளை நீக்க உதவ வேண்டும் என்று அமெரிக்காவில் உள்ள தமது தலைமையத்தை கோரவிருப்பதாகவும் அவர் தெரிவித்தார். (இ-3)

## யாழ். நகரைப்...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

திகளில் படையினர் தரித்து நின்று வருவதாகவும் கூறினார்.

இதேவேளை —

''சூரியப்பிரகாசம்'' இராணுவ நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டு ஒரு மாதம் கடந்து விட்ட நிலையில் யாழ். நகரைக் கைப்பற்றுவதற்கான நடவடிக்கை அந்த நகருக்கு அண்மையில் தற்காலிகமாக இடைநிறுத்தி வைக்கப்பட்டிருப்பதாக இராணுவத் தரப்பை மேற்கோள் காட்டி பி. பி. ஸி சிங்கள சேவையின் முகவர் எல்மோ பெர்னாண்டோ தெரிவித்தார். (ஐ-3-6)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்பிளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட்டினரால் சாவகச்சேரி, சரசாலை தெற்கில் உள்ள அவர்களது தற்காலிகப் பணிமனையில் 17-11-95 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org